இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889)
ஆவணி மாதம் 28-ம் உ ஆரம்பமானது.

செவ்வாய் வெள்ளி தோறும் வெளிவருவது

Registered as a News Paper in Ceylon
P. M. G No. H A 59/300 of 1939

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத் - கூடு] யாழ்ப்பாணம்:- நந்தன வூ சித்திரை மீ உ௦ உ வெள்ளிக்கிழமை (2 May 1952) [இல - அ]

# அஞ்ஞானம் அகற்றும் ஆதவன் அருட் குருவே!

## ஐம்புல நுகர்ச்சியை அறவே ஒழித்தல்

பிறவித் துன்பத்துக்கு மூல காரணமா யுள்ளது அஞ்ஞானம் அல்லது அறியாமையெனச் சைவசமயம் மாத்திரமல்ல புத்த சமயமுங் கூறுகின்றது. அறியாமையே வித்தென்றும், அவ்வித்தினின்றே நாம் யாரென அறியாமல் தேகத்தையே நாமென எண்ணும் மயக்கமாகிய முளை உண்டாகிறதென்றும், அம் மயக்க காரணத்தினால் மனம் விரிவடைந்து பற்றும் உலக விவகாரங்களே இலைகள் என்றும், தேகமே மரம் என்றும், தத்துவங்களே கிளைகள் என்றும், இந்திரியங்களே சுள்ளிகள் என்றும், புலன்களே மலர்களென்றும், நாம் செய்யும் வினைப்பயனும் நாம் அனுபவிக்கும் இன்ப துன்பங்களே கனிகள் என்றும், ஆன்மாவே அக்கனிகளைப் பட்சிப்பதற்குத் தேகமாகிய மரத்தில் தங்கியிருக்கும் பறவை என்றும் மிக அலங்காரமானவோர் உவமையை மகா ஞானிகள் போதித்துள்ளார். எனவே, ஆன்மாவைப் பந்திப்பதற்கு மூல காரணமா யுள்ளது அஞ்ஞானம் என்பது வெளிதிற் புலனாகின்றது. ஆகையால் பந்தம் நீங்க வேண்டுமானால் அஞ்ஞானத்தைப் போக்கவேண்டும்.

அவித்தை ஈசுவரனின் திரோதான சக்தியால் ஆக்கப்பட்டவோர் பந்தமுளை ஆனால் அதற்கு வழிகோலியது நாம் முற்பிறவிகளிற் செய்த வினைபசம். எனவே நம்முடைய அவித்தைக்கு நாமே பொறுப்புடையவர்களாகிறோம். ஆனால் அவித்தையை வருவித்த விதமே, அதைப் போக்கவும் முடியுமென்பதற் கையமில்லை. கடவுளிடத்தில் அன்பு செலுத்துவதால் அல்லது ஈசுரபக்தியால் அதைப் போக்கலாம் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. எவ்வளவுக் கெவ்வளவு கடவுள்பால் அன்பு வளர்ந்து கொண்டு போகுமோ அவ்வளவுக் கவ்வளவு அஞ்ஞான விருளும் நீங்கிக்கொண்டு போகும். ஈசுரபத்தியை வளர்ப்பதற்குச் சற்குருவின கடாட்சம் அவசியம் வேண்டும்.

### குருவில்லாச் சம்பிரதாயம் மேலுமில்லைக் கீழுமில்லை

அஞ்ஞானத்தைப் போக்கி, முத்திக்கு வழியைக் காட்டுபவனே குரு. அவ்விதமான சற்குரு இலேசிற் கிட்டுவது சுலபமல்ல. ஆனால் நமக்குப் பக்குவம் வந்தவுடன் ஈசுவரனே குருவாய்த் தோன்றி நம்மை வழிநடத்துவார். பக்குவம் அடைவதற்கு நாலு சாதனங்கள் குறிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றுள் முதலாகவுள்ளது.

### நித்தியாநித்திய வஸ்து விவேகம்

அல்லது சித்தினதும் சடத்தினதும் உண்மை யியல்புகளை அறிதல். சடப்பொருள்கள் யாவும் அநித்தியமானவை. அவைகளிற் பற்றுவைப்பது வீண். சித்துப் பொருள் ஒன்றே நித்தியமானது என்னும் விவேகம் ஸ்திரமாகவுண்டாவதே நித்தியா நித்திய வஸ்து விவேகம் எனப்படும்.

இரண்டாவதாக, இகமுத்திரார்த்த பலபோக விராகம் வேண்டும். இம்மை மறுமைப் போகங்களை வெறுத்தலே இகமுத்திரார்த்த பலபோக விராகம் ஆகும். இப் பிறப்பிலும் மறுபிறப்பிலும் அடைதற்குண்டான விஷயபோகமனைத்தும் கணத்தி லழியுமென்றும் அவைகள் துன்பத்தைதே கொடுக்குமென்றும் கண்டு, மனம் பற்றற விடுதலே இகமுத்திரார்த்த பலபோக விராகம்.

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

*************************

## சிவதொண்டன்

*************************

## திரிபுரத்தையெரி செய்த ... ... ...

திருச்சிற்றம்பலம்

செறிகழலுந் திருவடியுந் தோன்றுந் தோன்றும்
திரிபுரத்தை யெரிசெய்த சிலையுந் தோன்றும்
நெறியதனை விரித்துரைத்த நேர்மை தோன்றும்
நெற்றிமேற் கண்தோன்றும் பெற்றந் தோன்றும்
மறுபிறவி யறுத்தருளும் வகையுந் தோன்றும்
மலைமகளுஞ் சலமகளும் மலிந்து தோன்றும்
பொறியரவு மிளமதியும் பொலிந்து தோன்றும்
பொழிறிகழும் பூவணத்தெம் புனிதனார்க்கே.

திருச்சிற்றம்பலம்

## தேர்தலுக்காகும் திருக்குறள் 2.

முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்
தகநக நட்பது நட்பு.

### தேர்தற் புத்துரை

கோடிகட்டி, அல்லது கூட்டத்திற்குச் சென்று அல்லது கும்பிடு போட்டு விட்டால் மாத்திரம் வாக்கு நிச்சயமாகாது.

## இலங்கை இந்தியர் சத்தியாக்கிரகம்

புதன்கிழமை 30-4-52 இலங்கை இந்திய மகாநாட்டார் நான்கு இடங்களில் சத்தியாக்கிரகத் தொண்டு செய்தனர்.

## சைவப் பிரசங்கம்

சென்ற பங்குனி மீ 25 ந் திகதி (7-4-52) திங்கட்கிழமை இரவு நெடுந்தீவு மேற்குப் பிள்ளையார்கோவிலில் 4-ந் திருவிழாவிலன்று "மாம்பழத் தெய்வம்" என்ற பொருள்பற்றியும் 5-ந் திருவிழாவிலன்று, "சைவத்தின் மேற்சமயம் வேறில்லை" என்ற பொருள்பற்றியும், தெல்லிப்பழைச் சைவப் பிரசாரகர் திரு. பொ. கருணாகரர் அவர்களால் உபந்நியாசங்கள் செய்யப்பட்டன.

பிரசாரகர் அவர்களின் இரண்டுநாள உபந்நியாசங்களின் சாரம்: சிவபெருமானிடம் மாம்பழம் பெற்றவர்கள் விநாயகப் பெருமானும், காரைக்காலம்மையாருமே என்றும், இவ் வம்மையாரைச் சிவபெருமானே தமது அருமைத் திருவாக்கால் அம்மையே என்று அழைத்தபேறு பெற்றவரென்றும், தமிழுலகிற்கு இரண்டு பத்திநூல்களைப் பாடித் தந்தவர் என்றும் குறிப்பிட்டார்.

இரண்டாம்நாள் உபந்நியாசத்தில் புலாலுண்ணாமையே சைவசமயத்திற்குச் சிறப்பென்றும், அவ்வளவோடமையாது பஞ்சமா பாதகங்களையும் நீக்கிச் சமயதீட்சை பெற்றுச் சற்குருநாத சுவாமியாகிய நாவலர் பெருமான் காட்டிய வேத சிவாகமங்களைப் பதிவாக் கொண்டு கொள்ளும் சைவசித்தாந்த நெறியைக் கடைப்பிடிக்க தொழுகவேண்டுமென்றும் குறிப்பிட்டார்.

ஆசிரியர் அலை

## அபேட்சகர்களா? ஆதரவாளர்களா?

# ஆர் போட்டி............!

### போடுவது புள்ளடியா? பொல்லடியா?

#### எந்த விதத்திலும் வந்திடவேண்டுமா வெற்றி?

பாராளுமன்ற அங்கத்துவத்திற்கு யார் யாரோ போட்டி வேறுரோ வெறும்பி வெகுண்டு விரோதிகள் ஆகின்றுர்கள்! இந்த அபிமானம் எதைச் சேர்ந்தது? ஆள் அபிமானமா, கட்சி அபிமானமா, ஆணவ அபிமானமா?

வீதியிலும் வீட்டிலும், வேலைநிலையத்திலும் விளையாட்டுமைதானத்திலும், கோவிலடியிலும் குளக்கரையிலும் எங்கும் அபேட்சகர்கள் சார்பாக வாட்ச்சண்டை கைச்சண்டை. தன சக்தி கொண்டு எதுஞ் செய்யுந் தத்துவமில்லாதார்கள் புற சக்தியின் ஊக்கமது உறுதுணையாக அபேட்சகர்கள் சார்பாகப் பலவிதப் போராட்டங்கள் போடுகின்றனர்.

ஒவ்வொரு கட்சியினரும் ஏனைய கட்சியினரை மதுவின் துணைகொள்கின்றனர் என்று குற்றஞ் சாட்டவே எல்லாக் கட்சியினரும் இக் குற்றம் சாட்டப்பட்டவர்களாகின்றனர்.

காட்டின நன்மையோ பாராளு மன்றத்திலே நடைபெற வேண்டியனவோ இவை ஒன்றும வாக்காளர்களுக்கு விளங்கப்படுத்துவதில்லை.

போடு புள்ளடி அல்லது பொல்லடிதான் என்ற மாதிரித் தேர்தற் சின்னங்களை யிட்டு ஒரு போராட்டம்.

இதற்கிடையில் ஒரு விநோதம். எங்ஙனம் சென்ற தேர்தலில் ஒரு கட்சியில் நின்ற அபேட்சகர் எதிர்க் கட்சியிற் போராடுகின்றனரோ அங்ஙனமே அவர்கள் சின்னங்களும் [illegible]

## சர்வகலாசாலை வேண்டும்!

### யாழ்ப்பாண நகரசபையின் வேண்டுகோள்

யாழ்ப்பாணத்தில் ஒரு சர்வகலாசாலை யமைத்து நடத்துமாறு கல்வி மந்திரியை யாழ்ப்பாண நகரசபை கேட்டிருக்கின்றது.

## அதிட்ட லாப இருப்பு

கொழும்புத் திட்டக் காட்சியின் அதிட்ட இலாபப்போட்டிப் பணம் ரூபா பதினேழாயிரம் கையிருப்பி லிருக்கின்றது. காரணம் பதினேழு அதிட்ட இலாபச் சீட்டுக்காரர் தங்கள் இலாபப் பணத்தைப் பெற முன்வராதமையாகும்.

## வெள்ளை மணத்தின் விளைவு

ஆபிரிக்க வாசியாகிய செரட்சிகாமா என்பவர், ஒரு வெள்ளைமாதை மணம் புரிய எத்தனித்ததால், தமது நாட்டினின்று நீக்கப்பட்டார். தமது நாட்டுக்கு அவரைத் திரும்பிவர விடும்படி கேட்பதற்கு ஆபிரிக்க மக்கள் சிலர் லண்டனுக்குத் தூது சென்றிருக்கின்றனர்.

பாராளுமன்றத்தில் இதைப் பற்றிய வினாக்கள் எழுப்பப்படுமாம். விடை பகர்வதில் வெள்ளை அரசாங்கம் மிகுந்த வலியுடையது என்பதை அறியாதார் யார்?

## இலங்கை இந்தியர் நிலைமை

### திரு. V. V. கிரி அவர்கள்கூற்று

இலங்கை இந்தியர்கள் நிலைமையை ஆலோசிப்பதற்கு இலங்கை இந்திய அரசாங்கங்களின் பிரதிநிதிகள் சேர்ந்த ஓர் வட்ட மேசை மகாநாடு கூடுதல் நன்றென்று திரு. V. V. கிரி அவர்கள் கூறுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.

# இந்துசாதனம்

யாழ். நந்தன ஞூ சித்திரை மூ
உ௦ உ வெள்ளிக்கிழமை

## பஞ்சத்தால் வாடுவோரை ஆதரியுங்கள்!

இயற்கை எம் அன்னை ஈன்றவளும் இயாது போவாள் என்றால என்னுகும்? எங்கள் நாட்டிலும் சில காலம் வாரிவளங்குன்றிக் கமக்காரர் சொல்லொணுத் துயருற்றனர். இன்னமும் அந்த நீண்டகால நீர் வரட்சியின் துர்ப்பலன் இந் நாட்டைப் பாதித்துக்கொண்டே வருகின்றது.

எங்கள் அயல் நாடும் தாய்த்தேசமும ஆகிய பரதகண்டத்திலே சென்னை அரசாங்கப்பகுதியிலுள்ள சில கிராமங்களில் மழையின்மையால் கிணறு குளம் ஆறு முதலியன வற்றில் நீரில்லாது போக கமக்காரர் அதோகதியெய்தியிருப்பது மன்றி ஊரவர்கள் உட்கொள்வதற்கும் தண்ணீர்கிடையாது தவிக்கின்ற நிலைமையைப் பற்றிய செய்திகளை இந்தியப் பத்திரிகைகளில் நாம் பார்த்து மனம் வருந்துகின்ருேம். மனிதனின் ஊக்கமின்மையாலும் மடியுடைமையாலும் ஒரு பஞ்சமேற்படுமேயானல் அதற்குக் காரணராயுள்ளார் பால் எவர்க்கும் இரக்கம் உண்டாகாது. என்னை? 'மடிமடிக் கொண்டொழுகும் பேதை பிறந்த குடிமடியுந் தன்னினும் முந்து' என்ருர் நீதி நூல் வள்ளலார். ஆனல் இயற்கையின் போக்கிலே உண்டான ஒரு கொடிய பசிப் பிணி பரவுதலைக் கண்டு ஆர்தான் நெட்டுயிர்க்கார், ஆர் ஓடோடியும் உதவி செய்ய மனம் உந்தப்படார்?

உண்ணின் றுடற்றும் பசியின் கொடுமை சென்னை அரசாங்கத்துக்கு ஒரு பெரும் அல்லலைத் தேடி விட்டிருக்கிறது. அமைதியான ஒரு அரசாங்கத்தைச் சென்னையில் நிறுவப் பலகால் முயன்று அதிற் சிரமமெடுத்து வந்த தேசிய மகாசபைத் தலைவர்கள் தெய்வசம்மதமாகச் சிறந்த தேசாபிமானி திரு சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியாரை அரசியற் சபையை அமைக்க அழைத்துவிட்டதில் அகில உலகமும் ஆனந்தங் கொண்டிருக்கும் வேளையில், இயற்கையன்னையும் தேசத் தலைவர்களின்

### கைதிகளான கதை

இலங்கை இந்திய மகாநாட்டார் பிரதமருடைய கந்தோருக்குச் சென்று சத்தியாக்கிரகம் செய்தபொழுது பொலிசார் அவர்களைக் கைதிகளாக்கினர் என்று ஒரு கதை உண்டானது. அந்தக் கதை உண்மையல்லவென்று பொலிஸ் தலைமை அதிகாரி தெரிவிக்கின்ருர்.

சாந்த சத்தியையும் எந்நிலையிலும் மனந் தளராத தத்துவத்தையும் பரிசோதிக்கும் முகமாக எக்காலத்திலும் நிகழாத ஓர் நீர் வரட்சியை யுண்டுபண்ணி விட்டிருப்பதைக் கண்டு மனிதவர்க்கமே அசைந்து போய்விட்டது!

பசிப் பிணி தீர்ப்பதே மனிதனது முக்கியமான தொண்டென்று அறநூல்கள் எல்லாம் அறைகூவி உரைத்திருக்கின்றன. "ஈத்துவக்குமின்பமறியார் கொல் தாமுடைமை வைத்திழக்கும் வன்கணவர்" என்று வள்ளுவ ஞானி தெள்ளிதாய்ப் புகட்டிய அறநெறிச் சாரமே மனித மரபின் மாண்பைக் குறிக்கின்றது.

இலங்கைவாழ் மகாசனங்களுக்கு நாம் எடுத்துரைக்கக் கூடியதொன்று, பஞ்சத்தால் வாடும் ரூயல சீமாச் சகோதர சகோதரிகளுக்கு எங்கள் உணவில் ஒரு நாள் அளவைப் புண்ணிய விரத கைங்கரியம் என்று சேமித்துச் சேர்த்து அன்புடனும் ஆதரவுடனும் காலந்தாழ்த்தாது, நாளை செய்வோம் என்று பின்போடாது, ஆன பொருளுதவியை இலங்கையுள்ளார் செய்து வைக்கவேண்டியது மனித கடமையாம் என்க.

பொருள் கொடுப்பார் பொருளையும் பணம் உதவுவார் பணத்தையும் எவ்வளவு தாமதமின்றி அளிக்கின்ருர்களோ அவ்வளவுக்கு எமன் கையிலகப்பட இருக்கும் ஒரு பிழை அறியாப் பாலர்களையும் பாவையர்களையும், முதியோரையும் ஏனையோரையும் சென்னை நாட்டு ரூயல சீமா மக்கட்கு உயிர்ப்பிச்சை கொடுத்த நற்றவத் தொண்டர்கள் ஆவார்!

ஒரு பிடி சாதம் இல்லாதஇடத்து சிறிது பைங்கூழ். அஃதில்லாதவிடத்து ஒரு இளநீர், அதுவும் இல்லையேல் கிணற்றில் நீர் ஆவது கிடையாதா என்று பரிதவிக்கும நிலைமை ஏற்பட்டிருப்பது யாக்கை நிலையாமையில் ஏதோ சந்தேகம் உண்டானவர்களுக்கு அந்த ஆசங்கையை நீக்குவான் ஆக்கப்பட்ட நிலைமை போல இருக்கின்றதல்லவா? நில்லாவுலகில் மக்கள் செய்யக்கூடியது அறஞ்செய்து அரன்பணி ஆற்றுவதே!

"மேல்உலகம் இல் எனினும் ஈதலே நன்று"

தொடர்கதை

# இன்பத்தின் நிலை இதுதானு?

'இறை ஒளி'

18

[சங்கரர் ஓர் வைதிகப் பேர்வழி. வியாபாரஞ் செய்து தனவந்தர் ஆனவர். பரம்பரைத் தமிழ் அறிஞர். மாணிக்கவல்லி என்ற மனைவியும் பங்கஜம் என்ற மகளும் சங்கரரு சைவத் தமிழ் மரபுக்கான சூழலில் வாழ்க்கையை நடத்திவந்த போதிலும் இக்கால முற்போக்குப் பாதையிலும் நடந்து பார்க்க வேண்டுமென்ற எண்ணம் புத்திரி பங்கஜத்தில் உண்டாயது. பெற்ற தாயின் அனுசாணையும் பெற்ருள்,

சங்கீதம் கற்பதற்கு ஆசிரியர் குமாரனின் கல்லூரியிற் சேர்ந்தாள் பங்கஜம். கண்டதும் ஆசிரியர் கொண்டார் விபரீத விளக்கம் அதே கல்லூரியிலே பகவதி என்ற ஓர் அழகி சங்கீதம் கற்றவள். ஆசிரியர்பாற் பிரேமைகொண்டிருந்தாள்.

ஆசிரியர் குமாரன் தன் எண்ணம் நடைமுறையில் உருவாக ஓர் உபாயஞ் செய்தார். பிரேமை மிக்க அன்பை அடிப்படையாயுள்ள ஒரு கதையை வரைந்து அதைத் தனது கல்லூரி மாணவிகளும் தானுமாக நடிக்கவும் பிரேமைப் பகுதியிலுள்ள அம்சத்தின் ஒரு பகுதியை நடிக்கப் பங்கஜத்தையும் நியமித்தார்.

பகவதி நெஞ்சம் புகைத்தது. தன் எண்ணம் உருவாகாது விட்டாற் பிறர் எண்ணம் இல்லாதொழியவேண்டு மென்றும் உறுதிகொண்டு நாடக முயற்சிக்கு முட்டுக் கட்டை போட்டாள். இதற்கிடையில் வியாபார மேன்மை குறைந்து பணநிலை குணம்மாறிச் சங்கரர் போது நிலைமை குன்றி இல்லம் விட்டு நகர்ப்புறத்துக்குச் செல்ல நேரிட்டது.

ஊழ் வினை வலிக் கொள்ளும் நேரம், பங்கஜத்துக்கு ஆசிரியர் குமாரன் எழுதிய கடிதம் சங்கரர் கையிற் சிக்கியதுமன்றி, பங்கஜத்துக்கும் அறிவிக்கப்பட்டது.

நகர்ப் புறத்தில் உள்ள சிறு குடியிலிருந்து தன் நிலைமையை யோசித்த பங்கஜம் அருகே பாயும் ஆற்றில் வீழ்ந்தாள் அதே ஆற்றைக் கடந்துகொண்டிருந்த குமாரன் ஆசிரியர் - ஆற்றில் மிதந்த பெண்ணைக் காப்பாற்றி அக்கரை சென்று தபோதனப் பெண்கள் மடத்தை அடைந்தார். அங்கே பங்கஜம் தந்தை தாயாரில்லா இடத்திலே ஆசிரியருடன் பேச்சு நிகழ்த்துதல் பிழையென்று குறிப்பிட ஆசிரியர் சங்கரரையும் மாணிக்கவல்லியையும் தேட ஆரம்பித்தார்.]

**கவலையைத் தீர்ப்பது கானம்**

எண்ணம் எல்லாம் கனவு போல மாயமாய் மறைந்துவிட்டால் நிலைமை ஞானத்துக்கு கேதுவாகிவிடும் என்று உலக சரித்திரங்கள் குறிப்பிடுகின்றதற்கிணைய ஆசிரியர் சுடலைஞானம் பூண்டு வீதியிற் கானப் பிரியர்போல ஈசன் நாமத்தைப் பாடிக்கொண்டு போஞர் — இறைவனை நினைந்து நைந்து வரவர எண்ணம அவன்பாலே எழுந்தது. இன்பமான கானம் பிறந்தது. வாழ்க்கைப் புணை தடுமாறிப் புரண்டுவிடத் தத்தளித்துத் துணை தேடுவார் போன்று, ஒரே ஒரு புத்திரி இருக்குமிடமும் தெரியாது கவலையுற்று இறைவன் மேல் ஆணையிட்டு வீதிவழி விதியைச் சங்கரரும மனைவியாரும் காடிவரும் அமயம் "மனமே நீ ஈசன் நாமத்தை - வாழ்த்து வாய் ... ... தெவகானம் ... ... அலைந்துவரும் ... ஒலிகேட்

கேட்டனர். கவலையால் வாடிய உடம்பிற்கு கானம் பிராணவாய்வுபோன்று உற்சாகமளித்தது. ஒலிவந்த இடம் நோக்கி முன்னெறினர். கானப்பிரியரைக் கண்டனர். வாழ்க்கை மாயம என்றும், என்றும் புலனவழிப் போதலாற் கலக்கமென்றும் இறை ஒன்றே என்றும் அழியா இன்பக் களஞ்சியம் என்றும் பொருள்பட கானப்பிரியர் வாரிவாரிக்கொட்டத் தேன்மாரியிற் நினைத்து ஞான அமுதம உண்டார்போலச் சங்கரரும் மாணிக்கவல்லியும் உயிர்பெற்றனர். சற்சங்கத்து அங்கத்தவர்கள்போன்று கூடியவர்கள சில நாழிகை சென்று சுப இயலபின்பாற் பட்டபொழுது ஆசிரியர் குமாரனுக்குத் தமது சகாக்கள் சங்கரரும் மனைவியும் என்ற குறிப்புப் புலனுயது. ஆனல் சங்கரருக்கோ அஃது தெரியவில்லை.

(வளரும்.)

## எல்லா அபேட்சகர்களும் ஓரே கட்சியினரே

### முற்றிலும் உண்மை

பெரியார் ஒருவர் தாம் எல்லாக் கட்சிகளுக்கும் சேர்ந்தவராகச் சொல்லினர் உள்ளக்கிடக்கையை உணர்த்த வேண்டிப் பின்னரும் சொல்லினர் எல்லாக் கட்சியினருக்கும் ஓரே கொள்கைதானே' என்று,

இந்த உண்மையின் இரகசியத்தைப் பின்னர்த் தெளிவாகச் சொல்லும் பொழுது எல்லாக் கட்சிகளுக்கும் எல்லா அபேட்சகர்களுக்கும் உள்ளத்தில் உள்ள கொள்கை பாராளுமன்றத்துக்குப் போவதுதான், ஆகவே, எல்லா அபேட்சகர்களும் எல்லாக் கட்சிகளும் ஓரே பக்கந்தான்.

## நயினைத் திருவிழாக்காலச் சைவப் பிரசங்கம்

### கொடியேற்றத்தின் தத்துவக் கருத்து

கர ஞூ பங்குனி மீ 27 ம் உ (9-4-52) புதன் கிழமை இரவு நயினுதீவு தெற்கு வீரகத்தி விநாயகர் ஆலயத்தில, "உற்சவக்கிரியைகள்" என்னும் விஷயமாகச் சைவப்பிரசாரகர் திரு. பொ. கருணைகரர் (தெல்லிப்பழை) அவர்களால் ஒருபங்கியாசம் செய்யபபட்டது.

பேச்சின்சாரம்: கொடியேற்றம் ஆன்மா, மலத்தினின்றும் நீங்கிச் சிவஞானத்தைப் பெற்றுச் சிவத்தைப்படையும் முறையைக்காட்டும. கொடிமரம் பதியையம், கொடியேற்றும் கயிறு திருவருட் சத்தியையும் கொடிச்சீலை பசுவையும், தருப்பைக்கயிறு பாசத்தையும குறிக்கும். ரதோற்சவம், திரிபுரசங்காரத்தில் உண்மையைக் காட்டி மும்மலங்களைக் கெடுக்கும் பாவனையாக உள்ளது. தீர்த்தம் முத்தி நிலையைக் காட்டுவது. வாகனோற்சவம் காத்தலையும், மௌனோற்சவம் மறைத்தலையும் குறிக்கும்

பத்துநாள் உற்சவத்தில் முதல் நாள் உற்சவம், தூலசரீர நீக்கத்தின்பொருட்டும், 2 ம் நாள் தூலசூக்குமத்தின் வேருகிய ஆன்மா அத்தேகத்தைத் தன்னின் வேறெனக் கண்டு பற்று நீக்குதல்வேண்டும் என்னும் பாவனையாக நடத்தப்படுவது 3-ம நாள் விழா 3 வினை, 3 புத்தி 3 குணம, 3 குற்றம், 3 பிறப்பு, 3 பற்று நீக்கத்தின்பொருட்டுச் செய்யப்படுவது. 4ம் நாள் விழா, அந்தக்கரண நீக்கத்தின்பொருட்டும், நால்வகைத் தோற்ற நீக்கத்தின்பொருட்டும் செய்யப்படுவது. 5-ம் நாள்விழா, ஐம்பொறிகள், ஐந்தவத்தைகள், ஐந்துமலங்கள் நீக்கத்தின் பொருட்டுச் செய்யப்படுவது. 6 ம் நாள்விழா உட்பகை யாறும், அத்துவாக்களாறும், கன்ம மலகுணமாறும், பதமுத்தி ஆறும் நீக்குதற்பொருட்டுச் செயயப்படுவது 7 ம் நாள்விழா எழுவகைப் பிறப்பு, வித்தியாதத்துவம எழு, மாயாமலகுணமேழும் நீக்கத்தின் பொருட்டுச் செய்யப்படுவது. 8 ம் நாள் விழா எண்குண விளக்கத்தின்பொருட்டுச் செய்யப்படுவது. 9ம் நாள் விழா மூன்றுருவும் முத்தொழிலும், மூன்றிடத்துறைதலும் இலலையெனற்பொருட்டாகச் செய்யப்படுவது. 10 ம் நாள்விழா மோட்சமாகிய பரமானந்த வெள்ளத்தில் அமிழ்த்தும்பொருட்டுச் செய்யப்படுவது.

ஆகையினுல் உற்சவகாலத்தில் ஒவ்வொரு நாளும் ஆலயத்திற்குச் செல்ல வேண்டும என்றும் குறிப்பிட்டார். அன்று வசந்தோற்சவம் ஆனபடியால், அது சிருட்டியை விளக்குவது என்றும், மன்மதனுக்குரிய விலலும் பாணமும் வைத்துப் பூசிக்கப்படுவது என்றும் குறிப்பிட்டார்.

உ

இந்துசாதன இயக்கர்.

### சென்னை ரூயல சீமா பஞ்ச நிவாரண நிதி

| | ரூ ச |
|---|---|
| ஒரு அன்பன் | 5 — |
| ,, | 5 — |
| | 10 — |

பணம் உதவும் அன்பர்கள் இந்துசாதனக் காரியாலயத்திற்கு அனுப்புக

## சென்னையிற் தண்ணீர்ப் பஞ்சம்

சென்னை மக்கள் கொடிய உணவுப் பஞ்சததால் வருந்துகின்றனர். அவ்வளவில் நிற்கவில்லை. உணவுப் பஞ்சத்துடன் தண்ணீர்ப் பஞ்சமும் உண்டாயிருக்கின்றது. குடிக்கிறதற்கு தண்ணீர் நாளொன்றுக்கு இரண்டு மணித்தியாலங்களுக்கு மாத்திரம் கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கின்றதாம்.

எல்லைப்புறக்காந்தி அப்துல் காபர்கான் அவர்களுடைய தேகநிலைமை திருந்துகின்றது,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருநீலக் குடித் திருத்தலம்

## வழிபட்டோர் வரலாறு

திருச்சிற்றம்பலம்

வைத்த மாடு மனைவியு மக்களீர்
செத்த போது செறியார் பிரிவதே
நித்த நீலக் குடியா னைநினை
சித்த மாகிற் சிவகதி சேர்திரே.

திருச்சிற்றம்பலம்.

இத்தலம் காவிரித் தென்பால் 32-வது திருத்தலமாக வைத்து எண்ணப்பெறுவது. திருநாவுக்கரசு சுவாமிகள் திருப்பதிகம் பெற்றது. திருவாவடுதுறை ஆதீன நிர்வாகத்திற்குட்பட்டது.

வழிபட்டோர்:

அம்மையார் இறைவனை மதியாது செய்யப்பெற்ற தக்கன் வேள்விக்குச் சென்றமையாற் மலைவல்லியாகித் தவர்புரிந்து இறைவனை மணாளனாகப் பெற்றனர். சிவனுருடன் திருக்கயிலை செல்ல விரைந்தனர். 'எனை மணாளனாக அடைந்தனையாயினும், சொல்மதியாது வேள்விக்குச் சென்றனை; ஆதலின் நீ திருநீலக்குடி எனும் பஞ்சவில்வாரண்யதலம் சார்ந்து வன்மீகத்தடியில் அமர்ந்து தவம்புரிந்து மீண்டு கயிலை வருக' என்ற இறைவன் ஆணைவழியே இங்கு வந்து, கடுந்தவம் புரிந்தனர். தவத்திற்கு இரங்கிய பரமன் அக்கினி முகத்தவக் கோலராகி எதிரே தோன்றி நின்றனர். அக்கினி சுவாலை வீசிட எதிர்நின்ற இறைவனின் அண்மையில் சாரஇயலாவதாகிய அம்பிகை இறைமுகம் நோக்கி அடிபணித்து மன்னிப்பு வேண்டினர். கருணையுள்ளங் கொண்ட சிவனார் 'எமக்கு உன்பால் பொங்கி எழுந்த சினத்தீ இன்னுந் தணியவில்லை; ஆதலின் நீ சிவகைங்கர்யக் கன்னிகையாகிப் பணிபூண்டு கோபந் தணிந்திட தயிலாபிடேகப் பூசனை புரிந்து அணைவாய்' என அருளினர். ஆணைவழியே கன்னிகையுருக் கொண்ட அம்மையார் அணிபணிபூண்டு நீராடி நீறணிந்த மேனியளாய் அஞ்செழுத்தோதி, அலம்பித் தயாரித்த தூய வெள்ளை எள்ளைக் கொண்டு கதிரவன் எழுமுன் செக்கிலிட்டு ஆட்டி ஆக்கிய ஆடமணக்கையோடு கஸ்தூரி குங்குமம் கர்ப்பூர கோரோசனை ஆதிய சுண்ணங்கள் சேர்த்து நிரப்பிய தயில கும்பத்தினைச் சந்நிதி திருமுன், விமானத்தில் கோதுமை தானியம் கொண்டமைத்த ஆசனத்து வைத்து ஸ்ரீமகன்யாச உருத்திர வேதபாராயண செபத்தியானுந் விதி முறையில் எழுநாள் பூசித்து, போற்றி வழிபட்டனர்; இறையருளைப் பெற்று ஒருபாகம் உற்றனர். இப்பூசனை ஆண்டு தோறும் மேடமதி சுக்கில நவமியன்று இன்றும் நடைபெற்று வருகின்றது.

பிரமன்:

ஒரு நாள் பிரதோடகாலம், இறைவனை வணங்கிட திருக்கயிலைத் திருமலை சென்ற பிரமன் ஆங்கு நடனபவனி கொண்டு போற்றிடும் அரம்பை ஊர்வசி, திலோத்தமாதிய நடன தேவ மாதரார்களில், ஊர்வசியாது அழகில் ஈடுபட்டு மையல் மிகக்கொண்டு, சென்ற காரியத்தை மறந்தனன். இறையருட்டிருமுன் வரப்பெற்ற சாபம் உற்றிட அஞ்சினன். பணிந்து வேண்டினன். ஆயினும் அரன் அருள்வழி இங்குவந்து அடைந்து இலிங்கம் தாபித்து, தைலாபிடேகம் கொண்டு பூசித்துப் போற்றி இறையருளைப் பெற்றுச் சாப விமோசனம் உற்றனன்.

மார்க்கண்டேயர்

இறை வழிபாடு கருதித் திருக்கடவூருக்குச் செல்லும் பொழுது முற்குறிப்பாகப் பொருந்திய அபமிருத்யு பயம் நீங்கிட வேண்டி, இங்கு இறைவனை அருள்தழி அசமத்து சுற்றியுள்ள எலந்துறை, ஒதிமங்கலம் திருநாகேஸ்வரம், திருபுவனம், இடைமருது, மருத்துவக்குடி ஆய ஆறுதலங்களுடன்) பூசித்துப் போற்றி வழிபட்டு அச்சம் நீங்கினர்.

---

## செய்தித்திரட்டு

=0=

தமிழ் நாட்டின், இந்திய தேசிய மகாநாட்டுத்தலைவராக Dr. C. சுப்பராயன் அவர்கள் ஏகமனதுடன் தெரியப்பெற்றிருக்கிறார். இந்தப் பிரேரணை திரு. C. S. குமாரசாமிராசா அவர்களால் பிரேரித்து திரு. K. கமாருஜ்நாடாரால் அநுவதிக்கப்பெற்றது.

தேனும்பேட்டையில் நடந்த இக் கூட்டத்தில் திரு. இராசகோபாலச்சாரிடர் அவர்கள் சமுகமளித்திருந்தனராம்.

x　x　x

பிருன்ரோம் நாக் என்னும் கல்கத்தா மாணவன நூறு நாட்களில் 1500 மைல் தூரம் நடந்திருக்கிருர். நாளொன்றுக்குச் சராசரி 15 மைல்.

x　x　x

முஸ்லீம்களின் விரதகாலமாகையால் சபைத் தேர்தல் 30-5-52 ஆக வைத்திருக்கக் கூடாதெனத் திரு. W. டகநாயக பிரதம மந்திரிக்குத தெரிவித் திருக்கிருர். அதைப்பற்றிக் கவனிப்பதாகப் பிரதமர் பதில் கூறியிருக்கிருர்.

---

நேயர்கள்

## நெஞ்சம்

ஆசிரிய அன்ப,

### "ஏனோ பதில் இல்லை?"

நந்தன ஸ்ரீ ஆடி மீ 22உ காயத்திரிசெபம், என்று குறித்த எல்லாப் பஞ்சாங்கங்களும் போல் யாழ்ப்பாணத்திலுள்ள மட்டுவில் திருக்கணிதபஞ்சாங்கமும் குறித்து வெளிவந்திருப்பதால், கொக்குவில் பஞ்சாங்க கணிதர் தாம் குறிபாமற் தவிர்த்துவிட்ட காயத்திரி செபம்பற்றி இந்துசாதன (7-3-52) இதழில் விளங்கும் கேள்விக்குப் பதில் ஏனோவென வெளியிடாது அமைதிபெற்றார்கள்போலும்? ஆயினும் குற்றம் குற்றந்தான். அப்படியே என அவர் ஏற்றுக்கொண்டதே சால்பின் தகைமையாயிற்று. கழிந்தன கழிக. ஒரு நூற்றாண்டு வெளியீடென ஒரு சில வருடங்களுள் குறிக்கத்தக்கதாக வெளிவந்துகொண்டிருக்கும் அப் பஞ்சாங்கம் நிகழவிருக்கும் 96 ம் வருடப் பதிப்பில் எவ்விதமான பிழையுமின்றி வெளிவருமாறு செய்க எனக் கணிதத் தொடர்பால் யாம் அக்கணிதரவர்களை வேண்டுதலும் வீணாகாது.

'எல்லார்க்கும் நன்றும் பணிதல்'

சிவசூரியநாராயணபிள்ளை

பஞ்சாங்க கணிதர்

திருநெல்வேலி
இட்ட மொழி
தென் இந்தியா
18-4-52.

---

## அடைவு நகை
## விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் வண் - கிழக்கு கலட்டி 576/5 ம் நம்பர் கடையில் அடைவுபிடிக்கும் தா. சி. குமாரசாமி அன்ட் ஸ்ரீமதி தா. சி. சோமசுந்தரம் அவர்களுடைய கடையில் 1950 ம் ஆண்டு ஏப்ரல் தொடக்கம் 1951 ம் ஆண்டு ஏப்ரல் முடிய உள்ள, தவணை தப்பி எடுபடாமல் இருக்கும் நகைகளை 1952 ம் ஆண்டு மே மாதம் 17 ம் திகதி சனிக்கிழமை காலை 10 மணி தொடக்கம் மேற்படி இடத்தில் என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

போ. இராசரத்தினம்

வெந்திஸ் மேஸ்தர்.

M. 20 29, 2—5—52.

---

## தேவை

யாழ்ப்பாணம் திருநெல்வேலி சைவ ஆசிரிய கலாசாலையில் சித்திரமும் கைத்தொழிலும் படிப்பித்தற்கு பகுதி — நேர ஆசிரியர் ஒருவர் தேவை. வேதனம் அரசாங்க ஆசிரிய கலாசாலையில் பகுதி-நேர ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படுவதுபோலக் கொடுபடும்.

யாழ்ப்பாணம் சைவ வித்தியா விருத்திச் சங்கப் பாடசாலை முகாமைக்காரருக்கு விண்ணப்பஞ் செய்யவும்.

M 14　25, 29&2-5

---

சைவபரிபாலனசபைச்

## சமயப் பிரசாரம்

### உமாபதிசிவாசாரியர் குருபூசை

இடம் : சபை நாவலர்மண்டபம்

காலம் : 7-5-52 சித்திரை 25 உ புதன்கிழமை மாலை 6-30 மணியளவில் ஆரம்பமாகும்.

பேச்சாளர் : பிரம்ம ஸ்ரீ வ. மு. இரத்நேசுவரஐயர்

அன்பர்கள் சமுகமளிப்பார்களாக.

மு. மயில்வாகனம்
சமயப்பிரசார அமைச்சர்

யாழ்ப்பாணம், 1-5-52.

---

## மேற்சபைக்கு காலங் கிட்டிவிட்டதா?

— திரு. பீட்டர் கெனமன்

கொழும்பில் ஓர் கூட்டத்திற் பேசும்பொழுது பொதுவுடைமைக் கட்சித் தலைவருள் ஒருவரான திரு. பீட்டர் கெனமன் தங்கள் கட்சி அதிகாரம் பெற்றால் பாராளுமன்ற மேற்சபையையும் (Senate) நியமன அங்கத்துவத்தையும் இல்லாமற் செய்துவிடுவார்கள் என்று சொன்னாராம்.

இதை முன்னுடிபே அறிந்து போலும் பல மேற்சபை அங்கத்தவர்கள் தங்கள் பதவிகளினின்றும் விலகிப் பாராளுமன்றத்துப் பிரதிநிதி சபைக்கு அங்கத்துவம் நாடி நிற்கின்றனர்.

---

## உங்கள் நக்ஷத்திரம்?

ஸ்ரீ ராதா கிருஷ்ணன் கணிப்பது.　　எங்கள் சோதிடம்

இவ்வாரப் பலன்கள் 4—5—52——10—5—52

**மேடராசி** அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.

இந்த வாரம் ஒன்றும் புதிதாய்த் தொடங்க வேண்டாம். எந்த முயற்சிக்கும் பணத்தை விடவும் வேண்டாம். தேக சுகத்தைப்பற்றியும் கவனமாயிருக்க வேண்டும். வார இறுதியில் பண நெருக்கடிக்கும் குடும்பக் குழப்பத்துக்கும் இடமுண்டு.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.

கந்தோரில் குழப்பத் தொடக்கங்களுக்கு இந்தவாரம் இடமுண்டு. ஆனல் அது பெரும்பிழையானதாயிருக்கமாட்டாது. ஆலோசியாது தீர்மானங்கள் செய்யவேண்டாம். வாரஇறுதிக்கு முன் ஒரு சிறு பிரயாணத்துக்கிடமுண்டு.

**மிதுனராசி** மிருகசீரிடம், 3 4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.

இந்த வாரம் மிக விசேஷ அதிட்டமானதா யிருக்கின்றது. காத்திராத தனலாபம் வரும். எதிரிகள் நாசமும் புகழும் நிச்சயம். வீட்டிற் சமாதானமுண்டு. வீரச் செயலில் வெற்றிக்குமிடமுண்டு.

**கடகராசி** புனர்பூசம் 4ம் பாதம் பூசம் ஆயிலியம்.

இந்தவாரம்தொழிற்றுறையிலோ பணத்துறையிலோ சோர்வுள்ளகாலமாயிருக்கும். எடுத்த முயற்சி நல்லதுபொருத்தனைநன்றாயிருக்கமாட்டாது. [illegible] தொந்தரவு வரக்கூடும்.

**சிங்கராசி** மகம், பூரம், உத்தரம், 1ம் பாதம்.

மிக நல்ல வாரம். குற்றமில்லாத பண வசதியுண்டு. வியாபாரம் வளரும். நல்ல பேரும் உண்டாகும்.

**கன்னிராசி** உத்திரம் 2 3,4ம் பாதம அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

குடும்பத்தினர் சுகம், அல்லது சொந்தச் சுகம் பாதிக்கப்படக்கூடும். செலவு அதிகரிக்கும். விசேஷ கருமங்களைப் பின்போடவும். அவசர தீர்மானங்களைத் தவிர்க்கவும்.

**துலாம்** சித்திரை 3,4ம் பாதம் சுவாதி விசாகம் 1,2,3ம் பாதம்

பணக் காரியங்களுக்கும் உத்தியோக விஷயங்களுக்கும் நல்ல வாரம். குடும்பத் தொந்தரவுக்கிடமுண்டு. பிள்ளைகளுக்குச் சுகவீனமுண்டாகக்கூடும். ஒன்றும் கடுமையாகக்கூடிய குறியில்லை

**விருச்சிகராசி** விசாகம் 4-ம் பாதம, அனுஷம், கேட்டை.

இந்த வாரம் அவசர தீர்மானங்கள் செய்ய வேண்டாம். இழிமொழிப் பிரசாரஞ் செய்வோர மனச் சலனம் உண்டாக்கக் கூடும். விசேஷ காரியங்களில் எழுத்திற பிடிகொடுக்க வேண்டாம்.

**தனுராசி** மூலம் பூராடம் உத்தராடம் 1ம் பாதம.

கந்தோரில் நிலைமை வார இறுதியில் திருந்தும். காத்திராத இலாபங்களுக்கிடமுண்டு. சட்டத்துறை முயற்சிகளுக்கும் புதுத் துறையில் பணம் விடுதற்கும் நல்ல வாரம்.

**மகரராசி** உத்தராடம் 2,3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.

வார முதல் இரண்டு நாட்கள் அதிக மனச்சலனம் உண்டாக்கக் கூடும். தொழிலாளர் அல்லது உதவியாளர் சில வசதயீனம் உண்டாக்கக்கூடும் செவ்வாய்க்கிழமையின் பின், நிலைமை நிச்சயம் திருந்தும். வார இறுதிக்குமுன் சுப செய்தி வரவு உண்டு.

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்.

முன் இரண்டு நாட்களிலும் வியாபார உத்தியோக விஷயங்கள் நல்லாயிருக்கும். செவ்வாயும் புதனும் சஞ்சலத்துள் வைக்கும். குடும்பத் தொந்தரவும் பணச் சஞ்சலமும் உண்டாகக் கூடும். வியாழக்கிழமையின் பின் நிலைமை சிறிது திருந்தும்.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி.

புது முயற்சிகளுக்கு வார முற்பகுதி நல்லது. பிரயாண முறைகள் வியாழக்கிழமை தலையிடி உண்டாக்கக் கூடும். வெள்ளி, சனி காலைகள் கவனமாய்க் கழிக்க வேண்டும். சனி பிற்பகல் இன்ப நுகர்ச்சி முயற்சிக்குத் தகுந்த காலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அஞ்ஞானம் அகற்றும் ஆதவன் அருட்குருவே

1-ம் பக்கத் தொடர்ச்சி

மூன்ருவதாக, சமாதிஷட்க சம்பத்து என்னுஞ் சாதனஞ் சொல்லப்பட் டிருக்கின்றது. அதற்கு ஆறு அங்கங்கள் உண்டு. அவையாவன:- சமம், தமம், உபரதி, திதிக்ஷை, சிரத்தை, சமாதானம் என்பவையாம்.

ஐம்புல நுகர்ச்சியால் வரும் இழிவை அறிந்து, அவற்றின் பற்றைநீக்கி, ஏகவாத தியானத்தில் மனத்தை ஒன்றச் செய்தலே சமம் அல்லது இந்திரிய நிக்கிரகம். மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் அந்தக் கரணங்களையும், மெய், வாய், செவி முதலிய புறக் கருவிகளையும் புல நுகர்ச்சிகளிற் செல்ல விடாது தடுத்து ஆட்படுத்தலே தமம் அல்லது மனோ நிக்கிரகம். ஐம்புல வடக்கம் உபரதி.

துன்பங்கள் வந்தாலுஞ் சரி இன்பங்கள் நிகழ்ந்தாலுஞ் சரி சலனமின்றி யிருத்தலே சகித்தல் அல்லது திதிக்ஷை. சிரத்தையாவது வேதவாக்கியத்தில் நம்பிக்கையும் குருவினிடத்து விசுவாசமும் வைப்பது.

குரு உபதேசித்த லட்சியத்தின பிரகாரம் மனத்தை ஏகாக்கிரக சித்தமாய் நிறுத்துவது சமாதானம்.

நாலாவதாக, முமுக்ஷுத்துவம் கூறப்பட் டிருக்கின்றது. ஆணவமாய இருட் படலப் பாசத்தாற் பெறப்படும் கட்டுகளாகிய யான், எனது என்னும் அபிமானங்களினின்றும் நீங்கி, ஆன்மா தன்னியல்பையுணர்ந்து அந்தத் தனிநிலையையடைய விரும்பும்விருப்பம் முமுக்ஷுத்துவம் ஆகும்.

இந்த நாலு சாதனங்களையும் யார் சாதிக்கின்ருனே அவன் தன் குருநாதனின் அருளைப் பெற்று முக்திவழியிலே செல்வான் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. "அப்பமாதேன சமபதேதா" அதாவது "முக்திக்கு வழியைச் சிரத்தையுடன் தேடு" எனப் புத்தபகவானும் உபதேசித்திருக்கிருர்.

"ஒரு பொல்லாப்புமில்லை"

## 70-ம் வருடாரம்ப விழா

உடுவில் கந்தசுவாமி கோயிலில் 27-4-52 மாலை 6 மணிக்குத் தொடங்கி தமிழ்ப்பண்டிதர் வ.மு இரத்தினேசுவர ஐயர் அவர்களது 70-ம் வருடாரம்ப விழாவொன்று நடந்தது. அத்தருணம், திரு கு. முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை, திரு. மு. மயில்வாகனனர், திரு ஐ. மூத்துச்சாமிக் குருக்கள், திரு கு. அம்பலவாணர், திரு. தி.விஸ்வநாதக் குருக்கள் ஆகிய பெரியோர்கள், முறையே கடவுள் வழிபாடு, கந்தசுவாமியின் கருணை, சைவசமயக் கொள்கைகள், மனிதப்பிறவியின் பயன், சைவசமய ஒழுக்கம் என்பவற்றை நன்குவிளக்கி பேசினர். பிரம்மஸ்ரீவ. மு. இரத்தினேசுவரஐயரின் 70-ம் ஆண்டு ஆரம்பமாதலின் அவரது தமிழ்ப்பணிபற்றியும் அன்பர்கள் பாராட்டுரை கூறினர். ஆடவர் மகளிர் ஆகிய இருபாலாரும் குழுமிக் கேட்டின்புற்றனர். இரத்தினேசுவர ஐயரால் வந்தனங் கூறப்பெற்றுச் சபை நிறைவுற்றது.


சி. எம். சாமி மருந்துகள் உலகத்தில் பல பாகங்களிலும் விசேஷமாய் இலங்கையிலும் புகழ்பெற்று வருகின்றன.

### இரத்த சுத்தியைத் தருவது!

**தங்க பஸ்பம்**
வயோதிகரை வாலிபராக்கும் சகல வியாதிகளையும் நீக்கி சரீர சுகத்தையும் இல்லற இன்பத்தையும் தேக புஷ்டியையும் தரும்.
24-நாள் பஸ்பம் விலை ரூ. 15-0-0

**மதனமுதம்**
இதில தங்க பஸ்பம் வைத்தும், தனியாகவும் சாப்பிடலாம். ருசியுள்ளது.
½ சேர் புட்டி 1-க்கு ரூ. 5-0 0

**குரு பஸ்பம்**
க்ஷயரோகத்தைப் போக்குவதில் இதற்கு நிகரானது வேறில்லை. காசம், இளைப்பு, இருமல், தொய்வு, கோழை கட்டி கட்டியாய் விழுதல், இவைகள் எவ்வளவு நாட்பட்டதாயினும் குணப்படும். அனுபவமானது.
24-நாள பஸ்பம் அனுபானத்துடன் ரூ. 20-0-0

மலையப்பசாமி வைத்தியசாலை, பழனி.

ஏஜண்டுகள்
P. S. சுப்பிரமணியம, கி-ர் 78, மெயின் வீதி, கலகா. [கொடை
S. பொன்னுசாமிபிள்ளை, செ. 133 தம்பசொடை தெரு, பலாங்
இந்தியன் மெடிக்கல் ஸ்டோர்ஸ் கி-ர் 39 மெயின் வீதி ஹட்டன்.
T. N. ராமச்சந்திரன், வண்ணர்பண்ணை, யாழ்ப்பாணம்.

M. 16. 25-4-52—25-10-52.



திறமான **தேக்க மரங்கள்** பல தினிசுகளிலும்

திறமான **ருணிமார்க் ஓடுகள்** 13¾, 14 இஞ்சிகளிலும்

வந்திருக்கின்றன

தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்

சேகரம் & சன்ஸ்
ஆஸ்பத்திரிரோட், யாழ்ப்பாணம்.

Std. 2


## பெரிய புராணவுரை

சிவநேசச்செல்வர்களே!

தெய்வப்பன்னிரு திருமுறைகளுள் ஒன்ருய் விளங்குவது நம் தெய்வச் சேக்கிழார் பெருமான் அருளிச் செய்த திருத்தொண்டர் புராணமாகும். இந்நூல் செங்கதிரவன் எங்ஙனம் புறவிருளைப் போக்குகின்றனனே அங்ஙனம் மக்கள் மனதிலுள்ள ஆணவ இருளைப் போக்கவல்லது. இக்காலத்தில் உள்ள மக்கள் இந்நூலைப் பெரும்பாலும் தாமாகவேபடித்து அதன் பொருளை விளங்கமாட்டார்கள். சைவ உலகம் செய்துள்ள தவப்பயனுய்க் கோவையில் தோன்றிய சைவப் பெரியார் சிவக்கவிமணி உயர்திரு. C. K. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் நம்மவர்கள் இந்நூலை எளிதிற் கற்று விளங்குமாறு சென்ற 15 வருடகாலமாக ஒரு சிறந்த விரிவான விருத்தியுரை யெழுதி வெளியிட்டு வருவதை யாவரும் அறிவர். அவ்வரையில் 6 பகுதிகள் வெளிவந்துவிட்டன. 7-வது பகுதியுடன் அவருடையவுரை பூர்த்தியாகும். 7வது பகுதியின் உரை எழுதிப் பூர்த்தியடைந்து நீண்ட காலமாகியும் பணவசதியின்மையால் அது அச்சிட்டு வெளிவருவது தாழ்த்தப்பட்டிருக்கின்றது.

சைவாபிமானிகளும் தமிழன்பர்களும் அப்பெரியாருக்கு அவர்தம் வாழ்க்கையின் முக்கிய பணியாகப் புரிந்து வரும் தமிழ் மொழியும் சைவமும் விருத்தியடையும் இம் மேலான கைங்கரியத்துக்குத் தங்கள் தங்களாலியன்ற பொருளுதவியைப் புரிதல்வேண்டும். அவர்கள் அவ்விதம் செய்யும் உதவி அவருக்குச் செய்வதன்று. அது எங்கள தெய்வத் தமிழுக்கும் எங்கள் உயிரனைய சைவ சமயத்துக்கும் புரிவதாகும். அவருடைய உரையைப் பெற்றுப் படிப்பவர்கள் தமிழ் மொழி யறிவையும் சைவ சமய ஞானத்தையும் இலகுவில் அடைவார்கள். அவருடைய பெரிய புராணவுரைப்பகுதிகள் சர்வகலாசாலைகள் உட்படச் சகல வித்தியாசாலைகளிலும் பாடப் புத்தகங்களாக வைத்தற்குத் தகுதி வாய்ந்தவை. அவருடைய உரைப் புத்தகங்களை விலைக்குப் பெற்றுப் படிப்பவர்கள் தாங்கள் நன்மையடைவதுடன் அவர் வயது மூப்பெய்திய பருவத்திற் செய்து வரும் சிவப்பணிக்கும் துணைபுரிகின்றவர்களாவார்கள்.

பணம் அனுப்புகின்றவர்கள் சிவக்கவிமணி திரு. C. K. சுப்பிரமணிய முதலியார், சேக்கிழார் நிலையம், வைசியாள்வீதி கோயம்புத்தூர். என்றவிலாசத்துக்கு அனுப்பலாம்.

திரு. C. K. சுப்பிரமணிய முதலியாருடைய புராணவுரையின் கையெழுத்துப் பிரதி அச்சுக்கு அனுப்பித் திருப்பிவந்த சுவடிகள் இரண்டாம் காண்டம் முழுமையும் உள்ளன. ஸ்ரீமத் இலக்கண சுவாமிகள் கைப்படியுள்ள திருத்தங்களும் உள்ளன. அச்சுக்குப் போய வந்ததினுல் சிறிது அழுக்குப்படிந் திருக்கும். ஆனுலும் உரையாசிரியரின் கையெழுத்தாய் உள்ளது என்ற மதிப்பு அதற்கு உண்டு. பிற்காலத்தில் அதன் தேவையும் பெருமையும் அதிகமாகும். யாரேனும் தனியன்பர்களோ அல்லது புத்தக நிலயங்களோ சைவச்சபைகளோ தமிழ் நிலையங்களோ அவற்றை வாங்கிப் பாதுகாவலில் வைத்துக்கொள்ள விரும்புகின்றவர்கள் உரையாசிரியருக்கு எழுதிக்கொள்ளலாம்.

சேக்கிழார் திருவடி வாழ்க.

இங்ஙனம்,
மு. மயில்வாகனம்
சமயப்பிரசார அமைச்சர்
சைவபரிபாலனசபை

யாழ்ப்பாணம்,
26-4-52.

M. 21 2—5—52.


### யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
134,3670
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.
மாசமொன்று 1ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப்பற்றுவரவு.
எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானுல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.
க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏறபடும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.
கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.
இந்தியாநோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்.
நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும், வட்டி 12 விகிதம் அறவிடப்படும். (ஈடு வைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.
இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
பிரப்பர்.

Std. 14 20-11-46—20-11-49.



L.K.S. LEBBAY BROS
GOLD HOUSE

நல்லவாட்சிகள் கிடைக்குமிடம்
எல். கே. எஸ்.
லெப்பை பிரதஸ்
தங்கமாளிகை
கன்னுதிட்டி, யாழ்ப்பாணம்.

இலங்கையின்
மிகப் பெரிய
நகை
வியாபாரிகள்
=0=
தந்தி: "JEWELLERS"
போன்: 161.
விலாசம்:
63, கன்னுதிட்டி
யாழ்ப்பாணம்.



### சாலாமிஸ்ரி லேகியம்

இதனுல் மூலச்சூடு, இருமல், பித்தப்பாண்டு, குன்மவாயுவு, நெஞ்செரிவு, கை கால வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச்சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, சூலை, சந்துவாயுவு முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும். தேகபுஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் அதிகமாய்க் காணுதலால் நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப் பலம் உண்டாகும்.

ஒருறுத்தல் விலை ரூபாய் 25-00, அரைறுத்தல் விலை ரூபாய் 12-50, கால்றுத்தல் விலை ரூபாய் 6-75
வி. பி. பி. செலவு பிரத்தியேகம்.
வி. பி. பி: மூலமும் மருந்துகள் அனுப்பப்படும்.

சிவஞான பற்பொடி
சிவஞான பற்பொடியினுல் காலை பல் விளக்கி வந்தால், வாய் நாற்றம், முரசு கரைதல், முரசால் சீழ்வடிதல், முரசால் இரத்தம் வருதல், பல்லில் ஆணி கட்டல், பல்லைப் பூச்சி அரித்தல் முதலிய சகல துர்க்குணங்களையும் அகற்றிப் பல்லுக்குப் பெலத்தையுங் கொடுக்கும்.
பொட்டணம் 1-க்கு விலை சதம் 25

K. ஆறுமுகம்பிள்ளை
எமது விலாசம் நி. 3/1 தட்டாதெரு
M 196 1-2—30-4-52. கோட்டைமுனை, மட்டக்களப்பு.


Printed and Puplished by S. P. Kandiah, F. I. S. A. (Lond) residing at 245; Navalar Road Jaffna. or and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponna, Jaffna on Friday May 2. 1952.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org